www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# சுட்டும் வெட்டியும் வேரறுக்கப்பட்ட குடும்பங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்குவில் சத்துருக் கொண்டான், தன்னாமுனை, ஆகிய பகுதிகள் 1990 செப்டம்பர் 9ம் திகதி மாலை 5.30 மணியளவில் சுற்றிவளைக்கப்பட்டன.

இக்கிராமங்களில் அதற்கு முன்பே பலர் காணாமல் போயிருந்தனர்.

அதனால் பயந்துபோயிருந்த மக்கள் தங்கள் கிராமம் சுற்றி வளைக்கப்பட்டதும் கலங்கி நின்றனர். மிஞ்சியிருக்கும் ஆண்களையும் சுட்டுக் கொல்லப்போகிறார்கள் என்று பயந்தனர்.

சுற்றிவளைத்தவர்கள் சீருடையுடனும், சிவில் உடையுடனும் நின்றனர். அவர்கள் கைகளில் துப்பாக்கிகள் இருந்தன.

அவர்களில் சிலர் நன்றாகத் தமிழ் பேசினார்கள். கறுத்த ரீசேர்ட் அணிந்திருந்தார்கள்.

'உங்களுக்கு ஒன்றும் நடக்காது, கொமாண்டர் உங்களுடன் பேசவிரும்புகிறார்" என்று கூறினார்கள்.

வீடுகளில் இருந்து வெளியே அழைக்கப்பட்ட மக்களை இரவு 7 மணிவரை அப்படியே நிறுத்தி வைத்திருந்தனர்.

பின்னர் கொக்குவில் பிள்ளையாரடி, பன்னிச்சையடி, தன்னாமுனை ஆகிய பகுதி மக்கள் சத்துருக்கொண்டானை நோக்கி கொண்டு செல்லப்பட்டனர்.

தன்னாமுனையில் இருந்து கால் நடையாகவும், ஏனைய பகுதிகளில் இருந்து வாகனங்களிலும் மக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

காணாமல்போன தங்கள் கணவன்மாரைப் பற்றி அறியலாம். தங்கள் பிள்ளைகளை விடுதலை செய்யுமாறு கோரலாம் என்ற நம்பிக்கையில் கொமாண்டரைக் காண்பதற்காக பலர் ஓடிச் சென்றனர்.

தங்கள் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு தாய்மார்களும் விரைந்து சென்றனர்.

## பத்துமணியளவில்

இரவு பத்துமணியளவில் எதிர்பார்ப்புக்கள் அனைத்துக்கும் வேட்டு வைக்கப்பட்டது.

கைது செய்த அனைவரையும் சுட்டுத் தள்ளினார்கள். சத்துருக் கொண்டானில் வேட்டொலிகள் தொடர்ந்து கேட்ட வண்ணம் இருந்தன.

சுடப்பட்டு விழுந்தவர்களை ஒவ்வொருவராக இழுத்துக் கொண்டுபோய் வாளினால் வெட்டினார்கள்.

துண்டு துண்டாக வெட்டி கிடங்குகளுக்குள் போட்டனர்.

எப்படியோ தப்பிய ஒருவர் மறைவில் இருந்து இக் கோரக் காட்சியை தன் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் விறகு வெட்டி ஒருவரின் மகன்.

இவரது வாக்குமூலத்தை பின்னர் மட்டக்களப்பு சமாதானக்குழு பதிவு செய்தது. தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும் மொழி பெயர்க்கப்பட்ட வாக்குமூல ஒலிநாடா வெளி நாடுகளுக்கும் அனுப்பப் பட்டது.

சுட்டுக் கொல்லப்பட்டு வெட்டிப் புதைக்கப்பட்டவர்களில் இளம் தாய் மார்களும், குழந்தைகளும், வயோதிபர்களும் அடங்கியிருந்தனர்.

## இரக்கமற்ற வேட்டை

நற்குணசிங்கம் சித்ராதேவி என்ற இருபது வயது இளம்தாய் தனது குழந்தையை இடுப்பில் தூக்கிவைத்துக் கொண்டு தப்பியோட எத்தனித்தார்.

அதனைக்கண்ட கொலைஞர்கள் சரமாரியாக சுட்டனர். தாயும், இடுப்பில் இருந்த குழந்தையும் துடி துடித்து மாண்டனர். மாண்ட நாலுமாதக் குழந்தையின் பெயர்: வேணுராஜ். தாயார் இரத்தவெள்ளத்தில் கிடந்ததைப் பார்த்து அவரது ஆறு வயது மகன் சிவதரசனும், மூன்று வயது குழந்தை சிவதர்சினியும் தாயார் மேல் விழுந்து புரண்டனர்.

அவர்களை நோக்கியும் துப்பாக்கிகள் முழங்கின. இரண்டு பிள்ளைகளும் பிணமானார்கள். அவர்களையும் துண்டாக வெட்டி கிடங்கில் போட்டனர்.

மூத்தவன் வைரமுத்துவுக்கு 58வயது. மனைவி பூமணிக்கு 45 வயது. 8 வயதில் சர்மிளா என்னும் மகளும், ஆறு வயதில் ஜோதிவடிவேல் என்னும் மகனும் அவர்களது இரு கண்கள்.

துப்பாக்கிகளும், வாளும் அந்தக் குடும்பத்தையும் கூண்டோடு வேரறுத்தன.

கோபால் சவுந்தா ராஜா 26 வயது. மனைவி தங்கேஸ்வரிக்கு 24 வயது. இரண்டு பெண் குழந்தைகள். காயத்திரி 2 வயது. பிரியா 8மாதக் குழந்தை. அந்தப் பிஞ்சுக்குழந்தைகளுடன் சேர்த்து அக் குடும்பமும் வேட்டையாடப்பட்டது.

இவை உதாரணங்கள் மட்டும்தான். இப்படி பல குடும்பங்கள் பலியெடுக்கப் பட்டன.

நடக்கவே முடியாமல் தள்ளாடிக் கொண்டு நின்ற முத்தத்தம்பி பெரியதம்பிக்கு 74வயது. அவர் மனைவிக்கு 73 வயது. பொக்குவாய்கள் பிளக்க செத்து




வீழ்ந்தனர் அவர்கள்.

படையினரின் பயங்கரவாத ஒழிப்புக்கு தள்ளாத வயோதிபர்களும் விதிவிலக்கல்ல.

செம்டம்பர் பத்தாம் திகதி நடைபெற்ற கொலைவேட்டையில் பலியானவர்கள் பற்றிய புள்ளி விபரம் இது:

| | |
|---|---|
| சத்துருக்கொண்டான் | - 38 பேர் |
| கொக்குவில் | - 47 பேர் |
| பன்னிச்சையடி | - 37 பேர் |
| பிள்ளையாரடி | - 62 பேர் |



மொத்தம் 184 பேர் சத்துருக்கொண்டான் முகாமில்வைத்து கொல்லப்பட்டனர்.

இந்த வேட்டையில் முன்னின்றவர்களில் இரண்டு பெயர்கள் பிரபலமாக அடிபட்டன.

ஒருவர் கப்டன் முனாஸ். இன்னொருவர் மோகன்.

மோகன் அப்போது படையைச் சேர்ந்தவரல்ல. புளொட் இயக்கத்தின் மட்டக்களப்பு பொறுப்பாளர்.

# விற்கப்பட்டனவா உறுப்புக்கள்?

1994ல் கொழும்பு பொல்கொட வாவியில் தமிழ் இளைஞர்களது பிணங்கள் மிதந்த விவகாரத்திலும் மோகனின் பெயர் அடிபட்டது. அவர் தேடப்படுவதாகவும் கூறப் பட்டது.

இப்போது மோகன் இலங்கை இராணு வத்தில் ஒரு அதிகாரியாக இருக்கிறார். இன்றைய அரசு பதவிக்கு வந்த பின்னர்தான் மோகன் இராணுவத்தில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கப் பெண்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மனித வர்க்கவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அமெரிக்கப் பெண் ஒருவர் வந்திருந்தார். அவரது பெயர் பற்றீஷியா லோறன்ஸ்.

ஜனாதிபதி சந்திரிக்கா பதவிக்கு வந்த பின்னர் கிழக்கில் காணாமல் போனோர்கள் பற்றி விசாரிக்க முன்னாள் நீதியரசர் கே.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

ஆணைக்குழுத் தலைவருக்கு பற்றீஷியா லோறன்ஸ் எழுதிய கடிதத்தில் முனாஸ், மோகன் ஆகியோர் பற்றியும் பிரஸ்தாபிக்கப் பட்டிருந்தது.

தான் அறிந்த பல தகவல்களை பற்றீஷியா கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அக் கடிதத்தின் முக்கிய பகுதிகளை தருகிறேன்.

"சத்துருக்கொண்டான் கிராமத்தில் ஒரு தாமரைக் குளம். அதன் அருகே மிகப் பழமை வாய்ந்த கண்ணகை அம்மன் கோவில். 1978ம் ஆண்டு சூறாவளியின்போது இக்கோவில் உடைந்துபோனது. அவ்வாலயம் மீண்டும் திருத்திக் கட்டப்படவில்லை.

இக்கிராமத்தில் ஏராளமான கன்னிப் பெண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 1990ல் மீண்டும் போர் ஆரம்பமானதும் இவர்கள் கொல்லப்பட்டனர்.

இவர்களோடு பல சிறுவர்களும், பல வயோதிபர்களும் படுகொலையாகினர்.

நடந்த கொடுமைகள் பற்றி எஞ்சியிருப்போர் எதனையும் கூறுவதற்கு தயங்குகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கும், அரச துருப்புக் களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நிகழ்வதால் ஆங்காங்கே சோதனை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுற்றிவளைப்புக்கள் நடக்கின்றன. அதன்போது பொது மக்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

இவற்றால் அச்சம் கொண்ட மக்கள் வாய்திறக்க அஞ்சுகின்றனர். இந்நிலையில் கண்ணகி அம்மன் (சிங்களத்தில் பத்தினி) தனது காக்கும் சக்தியை இம்மக்கள்பால் பிரயோகிக்காமல் விட்டுவிட்டாள் என்றே கருதவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏனைய மக்கள் போலவே தன்னாமுனை கிராம மக்களும் ஆயுதப்படையினர், ஆயுதக் குழுக்கள், மற்றும் முனாஸ், மோகன் போன்றோர் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்பது போலவே கூறப்பார்க்கின்றனர். இவர்கள் தொடர்பாக தங்களுக்கு தெரிந்தவற்றை எவ்வளவுதூரம் வெளிப்படுத்தாமல் இருக்கிறார்களோ அவ்வளவுதூரம் தங்களுக்கு பாதுகாப்பு என்று நம்புகின்றனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் அரசியல் பற்றி எதுவுமே பேசமுடியாத நிலையில் மக்கள் உள்ளனர். ஆகவே தங்களுடைய குடும்பங்களில் ஏற்பட்ட இழப்புக்கள் பற்றி பலர் என்னிடம் தெரிவித்த தகவல்களைக் கூறுகிறேன்.

அவர்கள் சார்பாகக் கூறுகிறேன் என்பதைவிட, அவர்களில் ஒருவராகவே தருகிறேன்.

தங்களின் ஆணைக்குழுவிடம் நான் தரும் சுயாதீனமான அறிக்கை இதுவாகும்." என்று தனது சுயாதீன அறிக்கையை சமர்பித்தார் பற்றீஷியா லோறன்ஸ்.

அவரது அறிக்கையில் பல தகவல்கள் இடம்பெற்றிருந்தன.

## அறிக்கை மாயம்

அதுதவிர ஆணைக்குழு முன் தோன்றிய பலரும் நடந்த சம்பவங்களை கண்ணீருடன் விபரித்தனர்.

காணாமல் போனோர் யாராவது உயிருடன் இருக்கிறார்களா? என்பதைக் கண்டறிய சிறைகளுக்கும், முகாம்களுக்கும் ஆணைக் குழு சென்று ஆராய்ந்தது.

இராணுவத்தினர் அந்த ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு கொடுக்க முன்வரவில்லை. அவ்வாறு இருந்தும் தனது விசாரணைகளை கடும் சிரமங்கள் இடையே ஆணைக்குழு பூர்த்தி செய்தது.

கிட்டத்தட்ட ஒன்றரை வருடம் விசாரணைகள் நடத்தியது.

அந்த அறிக்கையில் கொல்லப் பட்டோர் பற்றிய தகவல்கள், அதற்கு காரணமானவர்கள் என்று மக்களால் சுட்டிக்காட்டப்பட்ட படையினர் பற்றிய தகவல்கள் போன்றன அடங்கியிருந்தன.

இந்த ஆணைக்குழு விசாரணைகள் பத்திரிகைகளிலும் வெளியாகின. புதிய அரசு தக்க நடவடிக்கை எடுக்கப்போகிறது என்றே பத்திரிகைகளை படித்தவர்கள் நினைத்தனர்.

ஆணைக்குழு அறிக்கை ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களிடம் 1997 ஆரம்பப் பகுதியில் கையளிக்கப்பட்டது.

அதன்பின்னர் அந்த அறிக்கைக்கு என்ன நேர்ந்தது என்பது யாருக்கும் தெரியாது.

அந்த அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்க நேர்ந்தால் படையினரிடையே புகைச்சல் ஏற்படும் என்று கருதியே அமுக்கி விட்டனர்.

இன்றும் அரசிடம் விசாரணைக்குழு கேட்கும் தமிழ்க் கட்சிகள் கிழக்கில் காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழு அறிக்கைக்கு நடந்தது என்ன? என்ற கேள்வியை எழுப்பத் தவறியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட பா. உக்கள்கூட இவ்விடயத்தில் போதிய கவனம் செலுத்தாமல் இருந்து வருகின்றனர்.

## அச்சம் தரும் சந்தேகம்

சத்துருக்கொண்டான் முகாமில் பலியான பலரின் கண்கள் தோண்டப்பட்டதாகவும், உறுப்புக்கள் அகற்றப்பட்டதாகவும் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

சர்வதேச அளவில் கண்கள், சிறு நீரகங்கள் போன்ற உறுப்புக்களை மிகுந்த பணம் கொடுத்து வாங்க ஆட்கள் இருக்கிறார்கள்.

மருத்துவமனைகளிலும் உறுப்புத் திருட்டுக்கள் நடந்து பிடிபட்ட செய்திகளும் நாமறிந்ததே.

சத்துருக்கொண்டானில் கொல்லப் பட்டோரின் உறுப்புக்களும் அவ்வாறு விற்கப்பட்டதா? என்ற சந்தேகம் எழுந்தது.

அந்த சந்தேகத்தை 1994ல் பொல்கொட வாவியில் மிதந்த பிணங்களும் உறுதிப்படுத்தின.

அவ்வாவியில் மிதந்த உடல்களில் கண்கள் தோண்டியெடுக்கப்பட்டிருந்தன.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் கண் தானம் வழங்குவதில் இலங்கை முதலிடம் பெற்றிருந்தாக பாராட்டப்பட்டதையும் சத்துருக்கொண்டான் படுகொலைகளுடன் சம்பந்தப்படுத்தியும் சந்தேகங்கள் எழுந்தன.

இதுவரை விடைகாணப் படாவிட்டாலும், அலட்சியப்படுத்த முடியாத சந்தேகமாகவே இருக்கிறது.

விலை போகும் உறுப்புக்களை மட்டும் குறிப்பாக அகற்றியதுதான் சந்தேகத்திற்கு வலுச் சேர்க்கிறது.

இச் சந்தேகங்கள் அனைத்துக்கும் இன்றைய அரசு நினைத்திருந்தால் விடை கண்டிருக்கலாம். பொல்கொட வாவி விசாரணையை முழுதாக நடத்தி முடித்திருந்தால் பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்திருக்கும்.

## எரிப்பு

வந்தாறுமூலை அகதிமுகாம், சத்துருக்கொண்டான் படுகொலைகள் பற்றிய உண்மைகள் வெளியானதும் சம்பந்தப் பட்டவர்கள் விழித்துக் கொண்டனர்.

உடல்கள் போடப்பட்ட கிடங்குகளை தோண்டி, அவற்றை வெளியே எடுத்து எரித்துவிட்டனர்.

ஆதாரம் இருந்தால்தானே சிக்கல். எனவே ஆதாரங்களையே முற்றாக எரித்துவிட்டனர்.

## மன்னிப்புச் சபை

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக் கழக அகதிமுகாமில் 158 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்தது.



மட்டக்களப்பு வாவி

1994 ஜூலைமாதம் சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த அறிக்கையில், "மனித உரிமைகள் பணிக்குழு சுட்டிக்காட்டிய படையினர் நால்வர்மீது அரசு நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்றும் சுட்டிக் காட்டியது.

50 பேர்வரையான சீருடை தரித்த, தரிக்காத பாதுகாப்பு படையினர் மேற்படி சம்பவத்தில் பங்கு கொண்டனர் என்பதையும் மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

மட்டக்களப்பு சமாதான சபை 1990 நவம்பர் 12ம் திகதி ஜோசப் பரராஜசிங்கம் பா.உ. வுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறியது.

"வந்தாறு மூலையில் கைதானவர்கள் தொடர்பாக விபரம் அறிவதற்காக 6.11.90ல் மொறக் கொட்டாஞ்சேனை இராணுவ முகாமிலிருந்து மூத்த இராணுவ அதிகாரியிடம் சென்று முறையிடப்பட்டது. அவர் "கைதானவர்கள் வெலிக்கடை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருப்பதாகவும், மேற்கொண்டு விபரங்களை 10 நாட்களின் தெரிவிப்பதாகவும் கூறினாராம். பின்னர் முறையீட்டாளர்களுக்கு எதுவித தகவலும் கிடைக்கவில்லை."

இப்போது எல்லாமே தெளிவாகி விட்டது. நீதி மட்டும் கிடைக்கவில்லை.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்